Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு ஹூ ஆடிமீ உள உ ( 1943 ஆகஸ்ட்மீ 12 வியாழக்கிழமை) [இல. நஉ

## ஐக்கியநாணய சங்கங்களின் வருடாந்த மகாநாடு

### மிஸ்றர். குணத்திலகா திறந்துவைத்தார்

இன்றுகாலை வடமாகாண ஐக்கிய சங்கங்களின் மகாநாடு வண்ணை கில்னர் ஸ்தாபனத்தில் ஆரம்பித்தது. சிவில் பாதுகாப்புக் கொம்மிஷனர், மிஸ்றர். ஓ. ஈ. குணத்திலகா C. M. G. அதனைத் திறந்துவைத்தார். அதுகாலை அவர் குறித்த ஸ்தாபனமண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு அவர் ஐக்கியநாணயசங்க இயக்கத்தலைவர்கள் பலருக்கு அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டார். மகாநாட்டுத் தலைவராகிய திரு. V. வீரசிங்கம் B. A, J. P. மிஸ்றர். குணத்திலகாவை வரவேற்றார். அதன்பின் மிஸ்றர். குணத்திலகா தமது திறப்புவிழா உரையை நிகழ்த்தினார்.

ஐக்கியநாணயசங்கங்களின் றிஜிஸ்ரார், வடபிரிவு உதவி றிஜிஸ்ரார், உயர்தர உதவி றிஜிஸ்ட்ராராகிய திரு. C. இரகுநாதன் ஆகியோர் இன்றுகாலை பேசினர்.

பிற்பகலில் திரு. K. நேசையா டக்றர், S. C. துரைராசா ஆகியோர் பேசுவர்.

## சர்வகலாசாலைக்குச் சிங்களப் பேராசிரியர்

டாக்டர். எம். டி. ரத்னசூரியா இலங்கைச் சர்வ கலாசாலையின் சிங்களப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சமஸ்கிருதப் பேராசிரியர் ஸ்தானம் இன்னும் நிரப்பப்படவில்லை.

கீழ்நாட்டுப் பாஷாபீடத் தலைவரான டாக்டர் ஜி. பி. மலலசேகரா பாளிப் பேராசிரியராகவும் கடமையாற்ற விருப்பதாகத் தெரிகிறது.

## இவ்வருடத்தில் யுத்தம் முடியாது

போர்ட்லந்து, ஆக 9

இந்தவருடத்தில் யுத்தம் முடியுமென்று எண்ணுவது அசட்டுத்தனமான நம்பிக்கையென்று அமெரிக்க கடற்படை மந்திரியான கர்னல் நர்க்ஸ் இங்குள்ள கடற்படைப் பயிற்சித் தளத்திற் பத்திரிகா நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது அறிவித்தார்.

## பெர்லினில் அகழிகள் வெட்டப்படுகின்றன

ஸூரிச் ஆக 9—

வெடிகுண்டுகளினாற் பாதிக்கப்படாத ஒதுங்கு மிடங்களைப் போதுமான அளவு பெர்லினில் நிர்மாணிப்பது அசாத்தியமா யிருப்பதனால் பெர்லின் நகரில் ஆழமான அகழிகள் வெட்டுவதற்கு ஜெர்மன் பயனியர் படைகள் ஆரம்பித்திருக்கின்றன. நகரிலுள்ள தொழிலாளர்வசிக்கும் பிரதேசம் ஒரு யுத்த அரங்கம் போன்று காட்சி யளிக்கிறது.

# இத்தாலி ஜெர்மனியைக் கைவிடாதாம்

## கார்க்கோவுக்கு 7 மைல்தூரத்தில் ருஷ்யர்

லண்டன் ஆக 10—

ஹிட்லரின் துருப்புகளை விரட்டி வரும் ருஷ்யப் படைகள் கார்க்கோவுக்கு வடக்கே 7 மைல் தூரத்தில் இருக்கின்றனவென்று ஸ்டாக்கோமிலிருந்து ராய்ட்டரின்விசேஷ நிருபர் எழுதுகிறார். அவர் மேலும் எழுதுவதாவது:-

ருஷ்ய இடுக்கித் தாக்குதலின் இடது கரம் கார்க்கோவிற்கு தென் மேற்கே 20 மைல் தூரத்திற்குள்ளாகவிருக்கின்றதென்று மொஸ்கோ நேற்றிரவு அறிவித்தது. ருஷ்யப்படைகளின் இடதுகரம் கார்க்கோவிலிருந்து வெளியேற ஜெர்மனியருக்குள்ள பிரதானமான இரு புகைரதப்பாதைகளுக்கு ஆபத்தை உண்டாக்கியிருக்கிறதாக அறிவிக்கப்படுகிறது. கார்க்கோவுக்கு அருகில்தான் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. மற்றொரு கரம் இப்பொழுது கார்க்கோவுக்கு ஏழுமைல் தூரத்தில் இருக்கிறது. பிரியானஸ்க் போர்முனையிற பிரியான்ஸ்க் நகருக்குக் கிழக்கே 26 மைல் தூரததிலுள்ள கார்க்கோவ் வீழ்ச்சியடைவது நிச்சயமென்று தெரிகிறது. கார்க்கோவ் வீழ்ச்சியுறுமானால் பிரியான்ஸ்க் செல்லும்பாதை ருஷ்யருக்குத் திறக்கப்பட்டுவிட்டதாகும்.

கார்க்கோவ் நகரை மூன்று பாகங்களிலும் ருஷ்யர் வளைத்துக் கொண்டிருப்பதாக மொஸ்கோவிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுகிறார்.

ருஷ்யப் போர்முனையில் ஸ்மாலென்ஸ்க்குக் கிழக்கே 50 மைல் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் ருஷ்யர் பெருந் தாக்குதலொன்றை ஆரம்பித்திருக்கின்றனரென்று பெர்லின் றேடியோ நேற்றிரவு அறிவித்தது.

## 'சமாதான மகாநாட்டிற்குக் காந்திஜியை அனுப்புக'

சாங்லி ஆக 6—

"மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிகள் மீண்டும் 'பதவி ஏற்க வேண்டும். யுத்தம் முடிந்தபிறகு நடக்கும் சமாதான மகாநாட்டிற்கு இந்திய ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளை அனுப்பி வைக்க வேண்டும். மகாத்மா காந்திதான் தற்சமயம் உலகத்திலேயே சிறந்த சமாதானத்தூதர், வரும் காலத்தில் இந்த யுத்தவெறி பிடித்த உலகிலிருந்து யுத்த நோயை அறவே ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தச் சமாதான மகாநாட்டில் இந்தியாவின் தனிச் சிறப்பு வாய்ந்த இந்திய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் மிகவும் உன்னதமான முறையில மகாத்மா எடுத்துக் காட்டுவார் என்று கனம் சீனிவாச சாஸ்திரியார் இன்று இங்கு நடைபெற்ற வெல்லிங்டன் கலாசாலையின் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்க விருந்து

## திரு. சுந்தரலிங்கமவர்களின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்கள் சங்கத்தின் வருடாந்த விருந்து இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை இரவு 8 மணியளவில் நடைபெற்றது.

இந்துக்கல்லூரிப பிரதமாசிரியர் திரு. A. குமாரசுவாமி யவர்கள் தலைமை வகித்தார்கள். 100 பேருக்கு விருந்தொழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

அதுகாலை பிரதம விருந்தாளியாக வந்திருந்த திரு. C.சுந்தரலிங்கமவர்கள் பேசியதன் சாரம் வருமாறு:-

களைப்பைத் தரும் தேர்தல்வேலைகளின் மத்தியிலிருந்து வரும் எனக்கு முதன்முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகிய பழமை வாய்ந்த இந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின விருந்திற் கலந்து கொள்வது ஆறுதலும் இன்பமும் பயக்கின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் தூண்டுதலின் பயனாக எழுந்த இந்தக் கல்லூரி அதனை ஸ்தாபித்தவர்களின் உயர்ந்த லக்ஷியங்களைப் பூர்த்தி செய்துவருவதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். காலஞ்சென்ற ஸேர். பொன். அருணாசலம் அவர்களின் பத்திரங்களைப் பார்த்துக் கொண்டு போகும்போது ஒரு பத்திரம் அகப்பட்டது. அதிலிருந்து கொழும்பில் ஓர் இந்து-பௌத்தக் கல்லூரியை ஸ்தாபிக்க வேண்டுமென்று அவர் திட்டம் போட்டிருந்ததாகத் தெரிகிறது. அவருடைய திட்டம் நிறைவேற்றப்படாவிடினும், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பெருந்தொகையான இந்து பௌத்தக் கல்லூரிகள் எழுந்து, தத்தம் தேசிய சமயாசார முன்னேற்ற நோக்கங்களுக்குப் பொருத்தமாகக் கல்வியையளித்து வரக்கூடியதாக இருக்கின்றது. இந்து மாணவர்கள் இந்து சமய சம்பிரதாயச் சூழலிற் கல்வி பெறவேண்டும். ஆயின், மற்றெந்தச் சமயத்தைக் காட்டிலும் இந்து சமயமே விரிந்த நோக்கமுடையது; ஒற்றுமையைப் பயப்பது என்பதை நாம மறந்துவிடுதல் கூடாது. இந்து சமயக் கோட்பாடுகளை நன்குணர்ந்தும் இந்துக்கல்லூரிகளிற் கற்று வெளியேறும் மாணவர்கள் இவ்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## இந்தியாவின் இராணுவ விஸ்தரிப்பு

புதுடில்லி ஆக 3—

இன்று காலை இராஜாங்க சபையில் கேள்வி நேரத்தின்போது இந்திய இராணுவம் பற்றிய அநேக கேள்விகளுக்குச் சேனாபதி ஸேர். ஆச்சின் லெக் பதில் அளித்தார்.

பண்டித குன்ஸ்ரு கேட்டதற்கு யுத்தம் ஆரம்பமானதி லிருந்து ஏறக்குறைய இருபது லட்சம்பேர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும்ஒருகுதிரைப்பட்டாள முட்பட 97 பட்டாளங்கள் இந்திய அதிகாரிகள் தலைமையி லிருந்து வருவதாகவும் பொதுத் தலைமைக் காரியாலயத்தில் இப்பொழுது நாற்பத்தைந்து இந்திய அதிகாரிகளிருந்து வருவதாகவும் சேனாதிபதி பதில் சொன்னார்.

## மண்வெட்டியால் தாக்கியதாக வழக்கு

யாழ்ப்பாணம் ஆக 7—

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் நீதியாசர் மிஸ்றர். ஈ. ஜி. பீ. ஜயத்திலக்கா கே. சீ. அவர்களினதும் ஆங்கிலம் பேசும் ஜூரிக் கனவான்களினதும் முன்பாகச் சென்ற மாசி மாதம் 15 ம் திகதி சாவணை வாசியாகிய மார்க்கன் மனுவல் என்பவனை மண்வெட்டியால் அடித்துப் பாரதூரமான காயமுண்டாக்கி அவனுக்கு மரணம் விளைவிக்க எத்தனித்ததாக அவ்வூர் வாசியாகிய பர்னாந்து-அருளப்பு என்பர்மீது தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளியின் சார்பாக நியாயவாதிகள் மிஸ்றர். எஜயமானவும் எதிரி சார்பாக மிஸ்றர். பி. இரகுபதியும் விவாதித்தார்கள். விசாரணை ஆரம்பமாகியதும் ஊர்காவற்றுறை டிஸ்திறிக் வைத்திய அதிகாரி டாக்டர். ஏ. எஸ். ஹென்ற் சாட்சியளித்தார். அதன்மேல், யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரி அதிகாரி டாக்டர்.எஸ். ஏ. வெற்றிவேலு அவர்கள் சாட்சியங் கூறினார். அதன் பின், காயமடைந்தவர் சாட்சியங் கூறினார்.

வழக்காளிபக்க நியாயவாதி கண்கண்ட சாட்சிகள் வேறு யாருமில்லாமையால் வேறு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை.

இதனோடு வழக்கு விசாரணை தவணையிடப்பட்டது.

## மற்றுமிரு சமசமாஜிகள் கைது செய்யப்பட்டனர்

ஏற்கெனவே 'பிரகடனம்' செய்யப்பட்டிருந்த இலங்கைச் சமசமாசக் கட்சி அங்கத்தவர்களில் மற்றுமிருவர் இந்தியாவிற் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அரசாங்கசபையில் முன்பு அவிசாவளைப் பிரதிநிதியாக இருந்தவரும் சமீபத்தில் இந்தியாவிற் கைது செய்யப்பட்டவருமான திரு. டி. பி. ஆர். குணவர்த்தனாவின்மனைவியான ஸ்ரீமதி குணவர்த்தனாவும் பையாகலையைச்சேர்ந்த திரு. லயனல் டி. ரேயும்தான் அவ்விருவர்களுமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுவூ
ஆடிமீ உஎஉ வியாழக்கிழமை

## "தேவாரம்"

"தே ஆரம், தேவாரமென்றாயிற்று. தெய்வத் தன்மை பொருந்திய பதிகப் பாமாலைகளையுடையதென அன்மொழித் தொகையாய் மூவர் திருமுறைகளுக்குங் காரணக் குறியாயிற்று. ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகம் பதினாறாயிரமும், வாகீசர் திருப்பதிகம் நாற்பத்தொன்பதினாயிரமும், நம்பியாரூரர் திருப்பதிகம் முப்பத்தெண்ணாயிரமுமாம். இவை தம்முளொடுங்கினபோக எஞ்சிய இக்காலத்து நிலைபெறும் மூவர்பதிகங்கள் முறையே முந்நூற்றெண்பத்து நான்கும், முந்நூற்றுப் பதினொன்றும், நூறுமாம். இவ்வெழுநூற்றுத் தொண்ணூற்றைந்தும் அடங்கிய திருமுறை அடங்கன் முறையென்று அவ்வாறு வழங்கப்படும் இவை பண்முறையாகவும் தலமுறையாகவும் ஓதப்படும்"

பன்னிரண்டு திருமுறைகளுள் இத் தேவாரங்களே முதன்மையாக வைத்து எண்ணப்படுவன; சமயாசாரியர் முதலிய நாயன்மார் அருளிச்செய்த பன்னிரு திருமுறைகளல்லாத தமிழ்ப்புலவர் பாக்களை விராய் ஓதுதல் அவற்றோடு தம்மை ஒப்பித்து ஓதுதல் உய்தியில் பெருங்குற்றமென்பது:—

ஒப்பிலி யனாதி முத்த னோதிய
வேதமாதிக்
கொப்புயர் வுரைப்பார் நிந்தை
யுரைப்பவர் உன்னுவாரும்
வெப்பெரி நிரயந் தன்னுள் வீழ்ந்து
வெந் துருகி வீயா
எப்பொழு தேறு வாமென் றிளைத்
திளைத் தேங்குவாரே"

எனவருஞ் சிவதருமோத்திரத் திருவிருத்தத்தால் அறியத் தகும்.

இந்த உண்மை இங்ஙனமாக, இற்றைக்கு ஒருமாசத்திற்குமுன் நடந்ததாகிய ஒரு கிறீஸ்தவசமய சேவைக்கூட்டத்தில், குறித்த சேவை தேவாரஞ் சொல்லித் தொடங்கப்பட்டதென, அப்பொழுது வெளிவந்த உதயதாரகையின் ஆங்கிலப்பாகத்தில் வெளியிடப்பட்டிருந்தது; அதனை அவதானித்த சைவாபிமானியாகிய வட்டுநகர் திரு. S. அண்ணாமலைப்பிள்ளை இந்த யூலாய் மாசம் 23 உ வெளிவந்த உதயதாரகை ஆங்கிலப் பாகத்தில் "சமய குரவர்களாகிய அப்பர் சுந்தரர் சம்பந்தர் மூவரும் பாடியருளிய திருமுறைகளே தேவாரம் என வழங்குவன. ஏனைய பாக்கள் அங்ஙனம் வழங்கப்படுதலில்லையே, அப்படியிருக்க, குறித்த சேவைக் கூட்டத்தில் பாடிய பாட்டைத் தேவாரமென்று கூறியது முறையா" என்னுங் கருத்தமைய ஒரு வினா நிகழ்த்திக் கடிதமாக வெளியிட்டார். அக்கடிதத்திற்கு மேற்படி பத்திரிகையின் ஆங்கிலப்பகுதியாசிரியரே "தேவாரமென்பதன் பொருள் தெய்வத்தின்மேற் பாடப்பட்டபாட்டு; ஒருபோது ஆரம்பத்தில் அச்சொல் மூவர் பாடியபாக்களுக்கு மாத்திரம் வழங்கி வந்திருக்கலாம்; ஆனால் காலகதியில் தேவாரம்என்னும் பெயர் அவைபோன்ற ஏனைய பாக்களுக்கும் வழங்கப்படலாயிற்று. கிறீஸ்துவர் தம் பாக்களைத் தேவாரம் என வழங்கியது குற்றமெனநாமறிந்தவரையில் நீரேமுதன்முதல் ஆட்சேபிக்கின்றீர்" எனத் தம் மனம் போனவாறு சமாதானம்வரைந்துள்ளார். உதயதாரகைஆங்கிலப் பத்திராசிரியர் கூறும்சமாதானம் தக்கதோ அன்றோ என்பது ஆராயத் தக்கது. ஒரு சமயத்திறத்துரியார் தங்கள் பரிசுத்தமான பாடலுக்குப் பண்டுதொட்டு வழங்கும நாமத்தைப் பிறிதொரு சமயத்தவர் எக்காரணமுமின்றித் தம் மதத்திற்குரிய பாடல்களுக்கு இட்டு வழங்குவது முறையா? "பைபிள்" என்ற பெயரைக் கிறிஸ்தவரல்லாதார் தாம் இயற்றிய ஒரு புதிய நூலுக்கு நவீனமாக இட்டு வழங்கினல், அவ்வழக்கு உண்மையான கிறீஸ்தவர்கட்கு விருப்பமாயிருக்குமா? இஸ்லாமானவர்களின் சமய நூலல்லாத பிறிதொரு சமயக்கோட்பாடுடையார் செய்த புதிய நூலுக்கு 'குரான்' என்ற பெயரை இட்டு வழங்கினல் இஸ்லாமியருக்கு அது சம்மதமாகுமா? அல்லாமலும் சைவசமயத்தை அநுட்டித்துவந்த பாமரசனங்களுட் சிலரைத்தம் மதத்திற்கு இழுக்கும்போது, சிறந்தசைவநூல்களாகிய தேவார திருவாசகங்களையும் புராணேதிகாசங்களையும் பொய்யானவை வீண பாடல்கள், அற்புதமற்றன, வீண்கதைகள் என்று நிந்தித்து அந்தப் பாமர சனங்களை வஞ்சித்துத் தம் மதத்திற் சேர்க்கும கிறீஸ்து மக்கள், அப்படித் தாங்கள் இகழ்ந்தொதுக்கியதாகிய தேவாரம என்றபெயரைத் தம்பாக்கள்கொண்ட நூலிற்குக் கவர்ந்து இடத்துணிந்தமை எதற்கோ? தேவாரம் திருவாசகமென்ற பெயர்களை விட, தெய்வத்தின்மேற் பாடப்படும் பாக்களுக்கு இட வேறு பெயர்கள் இல்லையா? எச்சமயவாதிகளும் தத்தம் சமயத்தைப் பத்தி பூர்வமாக அநுட்டித்து மகிழ்ச்சியடையலாம். ஆனல், அவர்கள் இன்னொரு சமயத்தவர்களின் மனம் புண்படக்கூடிய செயலைச் செய்ய வேண்டியதில்லையே. சைவமக்களெவரையேனும் கிறீஸ்தவராக்கும்போது, அவருக்குப் பெற்றார் இட்டிருந்த கந்தையா, சுப்பிரமணியம் முதலிய சைவத்திருநாமங்களைப் புறக்கணித்து, "பிரவுன்" எனறும், "ஹேஸ்ரிங்ஸ்" என்றும் 'சிமித்' என்றும், 'ஜோன்' என்றும், 'குக' என்றும ஞானஸ்நாநமிடும் நம் பத்திராசிரிய குழுவினர் இப்பொழுது சைவத்திருமுறைக்கே சிறப்பாகவுள்ள 'தேவாரம்' என்ற பெயரைத் தாம்பாடிய விபரீத பாடலுக்கு இட்டுக்கொள்ள மனங்கொண்ட காரணந்தான் யாதோ? காரணம் வேறொன்றுமன்று. சைவத் திருமுறைக்கும் தங்கள் நவமான பாக்களுக்கும் 'தேவாரம்' என்ற பெயர் சிலேடையாக இருந்தால் சைவர்கள் தங்கள் மெய்யான தேவாரமென்று மயங்குவார்களென்னும் நோக்கம்பற்றியேயாம். இப்படியான பொருந்தாச்செயல் உண்மையான சமயாபிமானிகட்கு அடாததாகும்.

இனி, "தேவாரமென்று எங்கள பாடலுக்கு நாங்கள் பெயரிட்டதைககண்டு முதன்முதல் ஆட்சேபஞ் செய்கிறவர் நீர் ஒருவர் தாம்" என்ற கருத்துப் படக்கூறி திரு. அண்ணாமலைப்பிள்ளைமேற் சீறுகிறார் பத்திராசிரியர், அவர் அப்படிச் சீறவொண்ணாது. திரு. அண்ணாமலைப்பிள்ளைக்கு மாத்திரமலல அந்த அடாத செயல் சைவாபிமானிகளெல்லோர்க்கும் கவலையையும் வெறுப்பையும் தருவதாமென்பதை நமது பத்திராசிரியர் சிந்தித்தல் வேண்டும். மேலும் சைவமக்களுக்கிடையேயிருந்த பிணககுகளெல்லாம் குன்றிவர, வேற்றுமை ஒருவாறு நீங்கி ஒற்றுமை ஏற்பட்டுவரும் இக்காலத்திலே நமது பத்திராசிரியர் இப்படியான விபரீதத்திரிகேதுவாயுள்ளவற்றை வரையப் புகுதல முறைபாகாதென்பதே நாம் இற்றிற சொல்லத்தக்கதாம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

### "சொல்வதொன்றும் புலப்படவில்லையே"

போசனம் முதலியன முடித்துக்கொண்டு, ஒருநாள் மத்தியானத்தின்மேல், தமது தலைவாசலில் இருந்து ஏதோ புதினப்பத்திரிகை படித்துக்கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளை, "இங்கே வந்துவிட்டுப் போம்" என்று தமது மனைவியைக் கூப்பிட, மனையாள் உடனே அங்கே வந்து "என்ன கூப்பிட்டீர்கள்" என்று விநயமாக வினவினள். "வேறொன்றுமில்லை; எங்கள் மகனுனுடைய விவாகம் நிறைவேறியும் ஓராண்டாகப் போகிறது; எங்கள் மகளுடைய கருமத்தைப்பற்றி ஏதும் சிந்தியாமற் சும்மாவிருக்கிறது சரியல்லவே; 'ஆண்பிள்ளைக்குக் கல்யாணம் முடித்துவைத்துவிட்டுக் குமர்ப்பிள்ளையிருந்து பெருமூச்சுவிட இன்னமும் அதை மூலையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று ஊர் எங்களைக் குறை கூறுமே, மேலும் எங்கள் பிள்ளைதான் எங்களைப்பற்றி என்ன நினைப்பாள்; இதைப்பற்றி நீரும் யோசிக்கவில்லை; நானும் இதுவரையும் யோசியாமற் பாராமுகமாக இருந்துவிட்டேன்" என்று கவலைகூரச் சொன்னர். "நான் யோசிப்பதனல் நடப்பதென்ன? நீங்கள்தானே யோசித்து ஒரு கருமத்தைச்செய்ய வேண்டும்; உங்கள் சம்மதத்திற்கு மாறாக நான் எப்போதாயினும் நடந்ததுண்டா; பிள்ளையை இப்படியே நெடுக இருக்கவைப்பது முறையல்லத்தான்" என்றாள் சிவகாமித்தாய். தம்மனைவி இப்படிக் கூறக்கேட்ட சிதம்பரப்பிள்ளை "நீர் எங்கேனும் நினைத்துவைத்திருக்கிறீரோ" என்று மீளவும் வினவ, "நான் எங்கே நினைத்து வைத்திருப்பது, நான் ஏதும் நினைத்திருந்தால் அதனை உடனே உங்களுக்கு வந்து சொல்லியிருப்பேனே" என்று மாவிலும் படாமல் மாங்காயிலும் படாமல் எறிவார்போற் பதில் சொன்னள். "ஒரு குடும்பத்திலேயே மேலும் மேலும் போய்ப் புகுவது புத்தியாக எனக்குத் தோற்றவில்லை" யென்றார் சிதம்பரப்பிள்ளை. அதற்கு யாதும் பதில் பகராது சும்மாவிருந்தாள் மனையாள். தாம் சொல்வன வெல்லாவற்றிற்கும் ஆமென்றுஞ் சொல்லாமல் அல்லவென்றுஞ் சொல்லாமல் தம் மனையாள் மௌனஞ்சாதிப்பதன் காரணத்தை யூகித்தறிந்த சிதம்பரப்பிள்ளை பின்னரும் அவளை நோக்கி 'எங்கள் மருமகளுடைய தமையனுக்கு எங்கள் பிள்ளையை மணஞ்செய்துவைக்கலாந்தான், ஆனல் அந்தப்பிள்ளைக்கு உத்தியோகம் போதாது" எனலும், மனையாள் "அதுமாத்திரமல்லாமல் மீட்டும் மீட்டும் ஒரு குடும்பத்துட் போய்ப் புகுவதும் புத்தியல்லவே" என்று புருஷன காட்டிய காரணத்தையே தானும் அப்படியே எடுத்துச் சொன்னள். "அப்படித்தான் முதல் நினைத்தேன்; ஆனல் எங்கள் மருமகளுக்கு நாங்கள் புறத்தியிலே சம்பந்தஞ் செய்தல் மனவருத்தமாயிருக்குமென்று யோசிக்கிறேன்" என்று சிதம்பரப்பிள்ளை ஒவ்வொரு சொல்லாகச் சொன்னர்; "மருமகளுக்கும் இந்தக் கருமத்திற்கும் என்ன தொடர்பு; நீங்கள் உங்களுடைய பிள்ளையின் நன்மையையல்லவோ நாடவேண்டும்" என்றாள் இல்லாள்; சிதம்பரப்பிள்ளை பின்னரும் யோசித்துவிட்டு "என்ன, நீர் சொல்வதொன்றும் எனக்குப் புலப்படவில்லையே" எனலும், "நான் உங்கள் நோக்கத்திற்கு மாறாக ஏதுஞ் சொல்லவில்லையே" என்று சிவகாமித்தாய் பதில் சொன்னள்.

### "நீ சொல்வதும் நியாயந்தான்"

சிதம்பரப்பிள்ளை பின்னுஞ்சிறிது யோசித்துவிட்டு "எங்கள் மகளின் எண்ணம் என்னவென்பது உமக்குத் தெரியுமோ" என்று வினவுதலும், மனையாள் "மகளின் எண்ணத்தை இன்னமும் நான் உசாவவில்லை" என்றாள்; "கேட்டுச்சொல்லுகிறீரா" என்று கணவன்கேட்க, 'ஓம்' எனச் சொல்லிவிட்டுத் தாய் மகளிருக்குமிடத்திற்குப் போனாள்; தாய் வரக்கண்ட மகள் எழுந்து தாயை இருக்கச்செய்து அவள் பணித்தபடி தானும் பக்கலில்இருந்தாள்; சிவகாமித்தாய் சிறிதுநேரம் யோசித்தபடி இருந்துவிட்டு, தங்கள் பிள்ளையைப் பார்த்து "கண்ணே, சுந்தரம், உங்கள் அப்பர் உன்னை ஏதோ கேட்டுச் சொல்லும்படி சொன்னர்; அதைபிட்டுத்தான் யோசிக்கிறேன்" எனலும், "என்ன! அம்மா, சொல்லுங்கள்" என்று ஆவலுடன் கேட்டாள் மகள். "வேறு என்ன மகளே, உன்னுடைய கல்யாணத்தைபிட்டுத்தான் உங்கள் அப்பர் யோசிக்கிறார், கவலைப்படுகிறார், உன் எண்ணத்தையும் அறிய விரும்புகிறார்" என்று மெல்லச் சொன்னள் சிவகாமித்தாய்; "அவைகளுக்கெல்லாம் இப்போது என்ன அவசரம் அம்மா, அல்லாமலும் எனக்கென்று வேறாக ஒரு சம்மதம் உண்டா? நீங்கள் இருவரும் அண்ணவும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்

(கொழும்பு அருள் தியாகராஜா அவர்கள் தெஹிவலை சைவசித்தாந்த மன்றத்தில் 27-6-43ல் நிகழ்த்திய விரிவுரையின் சுருக்கம்)

“அந்திப்போ தழகுறவே கடித்த
ருளும் வழித்துணைவ ரருளுங்
கோவை
வந்திப்போர் நினைத்தபடி
மயிலேறி யயிலெடுத்து வருஞ்
செவ் வேளைச்
சந்திப்போ மலர்சொரிவோம்
புகழ்ந்திடுவோ மவன் கமலத்
தாளுந் தோளுந்
சிந்திப்போ மாதலினல் நமது
பழ வினைகளெல்லாஞ் சிந்திப்
போமே”

அன்பு கனிந்த அம்மைமீர்களே!

ஐயன்மீர்களே!

“நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே” யென்னும் ஔவைப்பிராட்டியாரின் முதுமொழிக்கேற்ப, எமது தாய்நாடாகிய தென் இந்தியாவில், சைவசமய ஆசிரியர்களைப் போல, இந்த இருபதாம் நூற்றுண்டில், சைவத்தையுந் தமிழையும்ஒருங்கு வளர்த்த பெரியாராகிய திருப்பாதிரிப் புலியூர் திருக்கோவலூராதீனம், சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியரென்று போற்றப்படும் ஞானியாரடிகளின் பெருமையைப்பற்றிப் பேசவுங் கேட்கவும் இங்கு நாம் குழுமியிருக்கின்றேம்.

எமது சுவாமிகள், காவிரி நதியானது பாயப்பெற்ற புண்ணிய பூமியாகிய சோழவள நாட்டிலே கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருநாகேச்சரத்தில், சிவபக்தி மிக்க அண்ணுமலை ஐயரும் கற்பின் கொழுந்தாகிய பார்வதியம்மையாரும் ஈட்டிய தவத்தின் பயனாக இற்றைக்கு எழுபது ஆண்டுகட்கு முன்னர் ஸ்ரீமுக ௵ வைகாசி மீ ௪௳ (17-5-1873) வியாழக்கிழமை இரவு சுமார் பத்தேகால் மணியளவில் மூல நட்சத்திரமும் தனுர் லக்கினமும் கூடிய நல்ல ஓரையில், சைவநெறியும் தமிழ்நெறியும் தழைக்கத் திருவவதாரஞ் செய்தார்கள். ‘சுவாமிகள் பிறந்த நாள் சமயகுரவருள் முதல்வராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சிவப்பெருஞ் சோதியிற் கலந்து உடனிருந்தார் அனைவருக்கும் கொள்ளைகொளவிடருளிய மூர்த்திநாள் என்பதை நினைக்குந்தோறும், நமது சுவாமிகளும் இத்தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஞானசம்பந்தம் ஏற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தும் குருமணியாக விளங்குவதற்கு “நாள்செய்வது நல்லோர் செய்யார்” என்ற முதுமொழிப்படி அவர்கள் பிறந்த குருவாரமும வைகாசி மூலமும் அவர்கட்குத் துணை செய்தமை நன்கு விளங்கும். சுவாமிகளின் சாதகத்தின்படி ஒன்பது கோள்களின் நிலைவருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 4 | புத சுக் | கு ராகு | 7 |
| 3 | ஜாதகம் | | 8 |
| சனி | | | த ரு |
| ல சந் | கேது | செவ் | 10 |

தாய்தந்தையர்கள் சுவாமிகளுக்குப் பழநியாண்டியென்ற பெயரை இட்டழைத்து வந்தார்கள். இவருடைய தந்தையார் சோழநாட்டிலுள்ள திருக்கோவலூராதீனச் சீடர்களுக்குத் திருமணம் முதலிய சோடச கிரியைகளையும், அபரக்கிரியைகளையும் செய்து வைக்கும் கிரியாகுருவாகத் தொண்டுசெய்து வந்தார். சுவாமிகள் தாம் பிறந்த ஏழாம்மாசம் முதல் திருப்பாதிரிப்புலியூரிலுள்ள திருமடத்தில் நான்காவது குருமகா சந்நிதானமாகவிற்றிருந்த சிவசண்முகபரமசிவமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் மேற்பார்வையில், அம்மடத்திலேயே வளர்ந்து வந்தார்கள். சுவாமிகட்குத் தெலுக்கு ஐந்தாம் ஆண்டில் கற்பிக்கப்பட்டது. நான்கு வருடம் தெலுங்கு கற்றபின், ஏழு வருடம் மெற்றிகுலேஷன் வகுப்பு வரையில் ஆங்கிலமும் கற்ருர்கள். தமிழும் வடமொழியும் அவர்கள் கற்றுத் தேறியது பட்டத்திற்கு வந்த பல ஆண்டுகளுக்குப்பின் என்று கூறுப.

சுவாமிகளுடைய பதினேழாம் வயதில் திருமடத் தலைவர்க்கு உடல் நலங் குன்றிற்று. அதனுல் அதை நடாத்தத் திறமையுடையவர்கள் ஒருவரும் இல்லாமையால், தலைவரவர்கள் சுவாமிகளையே அப்பதவியை ஏற்கும்படி வற்புறுத்தினர்கள். சுவாமிகட்குப் பட்டாபிஷேகம் விரோதி ௵ கார்த்திகை மீ ௭௳ (20-11-1889) வியாழக்கிழமை சித்திரை நன்னுளில் நடைபெற்றது. பட்டத்திற்கு வந்த நாள் முதல், ஒரு ஞானபீடத்தின் தலைமைக்குரிய கல்வி, ஒழுக்கம், நாவன்மை முதலியவற்றைப் பெற வேண்டுமென்று இருபத்தைந்து வருஷமாகச் சுவாமிகள் செய்த முயற்சிக்கும் உழைப்பிற்கும் அளவேயில்லை. நாளடைவில் சுவாமிகள் தமது திருமடத்திலேயே சில சொற்பொழிவுகள் செய்யத் தொடங்கினர்கள். பின்பு சில நாட்கள் செல “வாணிவிலாசசபை” யென்ற ஓர் கழகத்தைத் திருமடத்திலேயே சோபகிருது ௵ (1903) நிறுவினுர்கள். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பாண்டித்துரைத்தேவர் முதலிய பல பெரியார்கள் அங்கே சென்று சொற்பொழி வாற்றியிருக்கிருர்கள். சுவாமிகள், சைவத்தை வளர்க்க ஓர் பெரிய கழகம் நிறுவவேண்டுமென்பதைத் திரு. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை நாகை வேதாசலம் பிள்ளை முதலிய அறிஞர்கள் வாயிலாக அறிந்து, விசுவாவசு ௵ ஆனி மாதம் (7-7-1905) “சைவசித்தாந்த சமாஜம்” என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் சமாஜத்தைத் தொடங்கி வைத்தார்கள், இந்தச் சமாஜமானது சைவசமய வளர்ச்சிக்காகத் தற்பொழுது செய்து வரும் தொண்டானது சைவ அறிஞர்களால் பெரிதும் நன்கு மதித்துப் போற்றற்பாலதாம். தற்பொழுது சமாஜக் காரியதரிசியாகப் பணி செய்து கிடக்கும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் 1921 ம் ௵ டிசம்பர் மாதம் முதன் முதல் காரியதரிசியாக நியமிக்கப்பெற்ருர்கள். சமாஜத்திற்கும் ஞானியார் சுவாமிகளுக்குமுள்ள தொடர்பை என்றும் நிலைபெறச் செய்த பெருமை அவர்களுக்கே உரியது. சுவாமிகளின் முயற்சியினுலேயே ‘சித்தாந்தம்’ பத்திரிகை புத்துயிர்பெற்று இற்றை நாளளவும தொடர்ந்து நடந்து வருகிறது.

திருப்பாதிரிப்புலியூரில், சுவாமிகள் முன்னிலையிலும், மறைமலையடிகள் தலைமையிலும் ஓர் பெரிய சைவப்பெரியார் மகாநாடு 1929-ம் ௵ மே மீ நடந்தது. தமிழ்நாட்டின்கணுள்ள சைவசபைகள் எல்லாம் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன. இம்மகாநாடு ஐந்து நாட்களாக நடைபெற்றது. சைவத்தின் அடிப்படையான கொள்கைகள் ... திருத்தங்கள், வளர்ச்சி முறைகள் ஒவ்வொரு சொல் சொல்லாக ஆராய்ந்து முடிவு செய்யப்பெற்றன. இவ்வைந்து நாட்களிலும் சுவாமிகளுடைய உதவியும் ஆலோசனையும் பெரிதும் பயனளித்தன. இதன் பயனுக சைவசித்தாந்த சமாஜமானது பன்னிரு திருமுறைகளையும், பதினுன்கு சாத்திரங்களையும், திருப்புகழ் முழுவதையும், மற்றுஞ் சிறு நூல்களையும் துண்டு வெளியீடுகளையும் ஆயிரக்கணக்கில அச்சிட்டு அடக்கவிலைச் சுத்தப் பதிப்புகளாக பலலாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இல்லங்களில் நுழைத்துச், சைவ மணம் கமழும்படி செய்துவருகின்றது. இதற்கு யாம் செய்யும் கைமாறென்னே! சுவாமிகள் சைவசித்தாந்த சமாஜத்தின் ஆண்டு விழாக்கள் பலவற்றில் தலைமை வகித்தது, அவற்றைச் செவ்வனே நடாத்தியிருக்கிறார்கள். தஞ்சையிலுள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கமானது

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# பண்டைத் தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர் சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

பழைய கோட்பாட்டில் பேசப்பட்ட கடவுள் சில சமயங்களில் கோபாவேசமுடையவராய்க் கூறப்பட்டிருப்பதை அவதானித்திருக்கலாம். இதை ஆராய்ச்சியாளர் ஓர் குறையாக நினைத்திருக்கமாட்டாரென்று எண்ணுகிறேன்.

கடவுள் மாறுதலின்றி ஒரே தன்மையாய் எப்போதும் இருப்பவராயினும் அவருடைய அருட்பிரகாசமானது ஆன்மாக்களின் தன்மைக்குத் தக்கவாறு பலவேறு உருவங்களாகத் தோன்றுகின்றது. இப்படி எடுக்கப்பட்ட உருவங்களில் எது ஓர் பகுதியினருக்குப் பிடிக்கின்றதோ அதை அப்பகுதியினர் மிகுதியாகப் போற்றிக் கடவுளை அவ்வுருவ மூலமாக வழிபடுவது இயல்பேயன்றோ? நமது சமயத்தின்படி இப்பிரபஞ்சம் முழுவதும் கடவுளின் அருட்சத்தியாலானது. மனிதர்களுடைய தகுதிக்கேற்ப அச்சக்தி பலவகையாகப் புலப்படும். இக்காரணத்தினுலேதான் வேதகால மனிதர் பஞ்சபூதங்களையும் சூரியன் சந்திரன் முதலியவற்றையும் வணங்கியது. இவை கடவுளின் அருட்சக்தியை ஒவ்வொருவிதமாகத் தெரிவிப்பனவாம். சாந்த சொரூபமாக அருட்சக்தியை வணங்க விரும்புபவன் உமாதேவியாரையும் உக்கிர ரூபத்தோடு வணங்க விரும்புபவன் காளியையும் உபாசிப்பான்.

இந்துக்களிற் சிலர் காளியை வணங்கலாயினர். அவர்களுக்கு வாமிகளென்று பெயர். அவர்கள் தங்கள் வழிபாட்டு முறைகளில விரோதமான சில வழக்கங்களை ஏற்படுத்தலாயினர். இவ்வழக்கங்களை யான் ஆமோதிக்கவில்லை. இவ்வாமமதத்திற்குத் தமிழர்களின் சமயமான சைவசித்தாந்தம் புறம்பானதே.

மிருக வணக்கம்

சமய ஏற்பாட்டின் பூர்விக நிலையில் மிருகவழிபாடு இருந்ததாக ஆராய்ச்சியாளரின் துணிபு. இந்துமதத்திற்கு விரோதமானவர்கள் இத்துணிபைக்கொண்டு இந்துமதத்தைக் கண்டிக்கின்றனர். இக்கொள்கை முற்றும் ஆபாசமானது. மிருகவழிபாடு இந்துமதத்தின் பிற்காலத்தில் உண்டானதென்று கொள்ளத்தக்கதேயன்றி முற்காலத்தில் உண்டானதென்று கொள்ளுவது கூடாது. விஷயத்தைத் தீர ஆராய்ந்தால் மிருக வழிபாடு சமயவழிபாட்டிலிருந்து உண்டானதேயன்றிச் சமயவழிபாடு மிருக வழிபாட்டிலிருந்து வந்ததன்று என்று புலப்படும்.

வழிபடும் எண்ணமானது முதல் முதல் சமயத்திலிருந்து உண்டானதே. அது காளடைவில் தப்பாக இதரபொருள்களை வணங்கும் வழக்காருயிற்று. வழிபாடு என்பது யாம் வழிபடும் பொருளோடு சம்பந்தப்பட்டது. எம்மால் வழிபாடு செய்யப்பட்ட பொருள் எமது வழிபாட்டை ஏற்று அதனுல் திருப்தியடைவதாகும்.

மனிதன் ஒரு பொருளை வணங்கும் போது அவன் தன் மனத்தில் எண்ணுவதென்னெனின் தான் வணங்கும் பொருள் தன்னுடைய வணக்கத்தால் பிரீதியடைகின்றதென்பதும், தான் செய்யும் வணக்கத்திற்குப் பதிலாகத் தனக்குப் பலனையளிக்குமென்பதுமாம், மிருகங்கள் வணக்கத்தின் மகிமையை அறியக்கூடாத நிலைமையையுடையன என்பது மனிதனுக்கு நன்ருகத் தெரியுமாதலால் அவன் மிருகங்களைத் தனது நன்மையை உத்தேசித்து வழிபட்டானென்பது தவருகும். மனிதன் தனது வழிபாட்டிற்குப் பதிலாக எப்போதும் வெகுமானத்தை உத்தேசிப்பவன். தன்னுல் வணங்கப்படும் மிருகங்கள் தனக்குப் பிரதியுபகாரஞ் செய்யமாட்டா என்பதை அவன் நன்ருய் அறிவான். அவை அவன் செய்யும் வணக்கத்தை ஏற்கக்கூடிய நிலையிலில்லை. என்னை? மனிதன் தங்களை வணங்குவதும் அவைகளுக்குத் தெரியாத நிலையிலவை யுள்ளன. இத்தகைய மிருகங்களை மனிதன் வணங்க நினைத்தானென்பது சிறிதும் பொருந்தாது. இவைகளை வணங்குவதால் மனிதன் வேறு வழியில் தனக்குப் பலன் கிடைக்குமென்று உத்தேசித்தானென்பது விளக்கமாகின்றது. உண்மையாக இவன் வணக்கமானது அப்பொருளுக்கே உரியது. இம்மிருகங்கள் ஒப்புப்பொருளாயின. வழிபாடு முதலில கடவுளுக்கே செலுத்தப்பட்டதாகும். பிறகு கடவுளின் அருட்பிரகாசம் எவ்வெப்பொருள்களில அதிகமாகத் தோற்றப்படுகின்றதோ அவ்வப்பொருள்களின் மூலமாக அவரை வணங்கலாயினர். இவ்வழிபாடு காளடைவில் கடவுட்பிரகாசம் தோன்றும் பொருள்களுக்கே உரித்தாயிற்று. கடவுள் வழிபாட்டிலிருந்து மிருக வழிபாட்டின் திரிபு இத்தன்மைத்தாகும். வழிபாடு அல்லது வணக்கம் கடவுட்டன்மையிலிருந்து உண்டானது. வழிபாட்டை ஏற்படுத்தும் போது அவ்வழிபாட்டுக்குத் துணைக்கருவிகளாகச் சில உலகப்பொருள்கள் கொள்ளப்பட்டன. இத்துணைக் கருவிகளே பிறகு தவறுதலாக முதற்பொருளாகக் கொள்ளப்பட்டன.

நமது முன்னோர்கள் இவ்வுலகத்தின் ஒவ்வொரு அணுப் பிரமாணத்தோறும் கடவுளின் அருள் பிரகாசிப்பதை நன்கறிந்தவர்கள். ஆன்மாக்களின் தகுதிக்கேற்றபடி அருட்பிரகாசம் வெளிப்பட்டும் மறைவாகவும் தோன்றும். ஆதலால் எங்கெங்கே வெளிப்படையாகத் தோற்றியதோ அப்பொருள்கள் மூலமாக அவ்வருளைத் தொழுதனர். இப்போதும், இந்துக்கள் இச்சடப்பிரபஞ்சத்தில் சித்துணர்ச்சியின் வன்மையை நன்குணர்ந்துள்ளார். இப்பிரபஞ்சத்திற் காணப்படும் பொருள்களை அற்பமாக நினைத்துப் புறக்கணிக்கமாட்டார். சித்தறிவுகொண்டு ஆராயத்தக்கவை பலவுள என்பதை நன்குணர்வர். (தொடரும்,

# ஓரியன்ரல் பாங்க் ஒவ் மலாயா லிமிற்றெட்

(ஐக்கிய மலாய் நாடுகளில் பங்காளரின் நிதி வரைவுளதாய் நிறுவப்பெற்றது)

## 8, மணிக்கூட்டுத்தெரு, யாழ்ப்பாணம்

மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று வடஇலங்கையில் சகலவித வங்கித்துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் **தேசீயவங்கி** இது ஒன்றே.

இவ்விடத்தில்:—

1. நடைமுறை, நிரந்தரக் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளுதல்;
2. அங்கீகரிக்கக்கூடிய தகுந்த பொறுப்புக்கு இலகுவானமுறையில் வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குதல்;
3. இந்தியாவின் சகல பட்டினங்களுக்குத் தந்தியுண்டியல்களும்; கொழும்பு, மதுரை, சேலம், சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செக்குகளும், உண்டியல்களும் பரிமாறுதல்;
4. இந்திய நோட்டுகள் வாங்குதல் விற்றல் முதலியன சகலருடைய வசதிக்குமேற்ப நடைபெற்று வருகின்றன.

எஸ். பீ. யோசேப்,
மானேஜர்.

(Mis. 206. 25-2-43—24-8-43) (வி)


## கொழும்பில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனர் திருநாள்

நிகழும் சுபானுஹு ஆடிமீ 23ந் திகதி (8-8-43) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில், கொழும்பு விவேகானந்தசபையின் ஆதரவில், வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில், சமய வகுப்பு மாணவர்களால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனர் திருநாள், ஆசிரியர் பண்டித சிவங், கருணாலய பாண்டியப்புலவர் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தலைவரவர்கள் இந்நாளானது பல சிவத்தொண்டர்கள் முத்தியடைந்த புண்ணிய நன்னாளென்றும், அறுபதுமூன்று நாயன்மார்களின் பெருமையை அறிவதற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையே மூலகாரணமென்றும், வாழை, கமுகுகள் நாட்டி இந்நாளை ஓர் மங்கலவிழா நாளாகச் சைவசமயிகள் கொண்டாடவேண்டுமெனவுங் கூறினார்கள். ஞானசம்பந்த சுவாமிகள் குருபக்தியையும், அப்பர் சுவாமிகள் இலிங்க பக்தியையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கம பக்தியையும் இவ்வுலகில் நிறுவியுள்ளார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரச் செழும்பாடல்கள் தமிழ்ச்சுவையும், இன்னிசையும் ததும்பப்பெற்றவைகளெனவும், அப்பாடல்களுக்கிரங்கி, எல்லாம் வல்ல பரமசிவனே அவருக்காக நள்ளிருள் யாமத்தில் பாவையிடத்தில் தன் பதமலர் சேப்பத் தூது சென்றாரெனவும், அவர் இறைவனைத் தோழனுகப்பாவித்துச்சகமார்க்கத்தைக் காட்டியிருக்கின்றாரெனவும் சேரமான் பெருமாள் நாயனர் அருளிச்செய்த 'திருக்கைலாச ஞான வுலா'வானது தற்போதிருக்கும் உலாக்களுள் தலைமையான தென்றும், அதனை எல்லாம்வல்ல சிவனே 'சொல்லுக' என்று சோலனைப் பணித்தபோது, அவர் பாடியதைத் திருச்செவிமடுத்து மகிழ்ந்தனரென்றும், இதனால் இறைவனுக்குச் செந்தமிழினிடத்தில் எவ்வளவு பற்றிருக்கிறதென்றும் இயம்பினார்கள்.

பின்பு அருள் தியாகராசா அவர்கள், கொச்சிநாட்டிலுள்ள 'தமிழ் மறந்த தலைநகரமாகிய திருவஞ்சைக்களத்தில், சுந்தரர் சேரமான் குருபூசை சென்ற எட்டுஆண்டுகளாகச் சிவக்கவிமணி, C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள் முயற்சியால நடைபெற்று வருகின்றதென்றும், அப்பெரியாரின் முன் மாதிரியைப் பின்பற்றி; தமிழ் நாடெங்குமுள்ள திருமடங்களிலும் சைலச் சபைகளிலும திருக்கோவில்களிலும் சைவ அன்பர்களில்லங்களிலும் இருவர் (சுந்தரர் சேரமான்) குருபூசையை நடத்துதல் இன்றியமையாததெனவும் உரைத்தார்கள. தலைச்சங்கப் புலவராகிய ஆலவாயிலவிர்சடைக் கடவுளே "மதிமலி புரிசை மாடக் கூடற்........" என்ற பதினொராந் திருமுறையில் காணப்படும் திருமுகப்பாசுரத்தைப் பாணபத்திரர்க்குப் பொருள் கொடுக்கும்படி, சேரமான் பெருமாள் நாயனருக்கு எழுதினுரென்றால், அவர் எவ்வளவு சிறந்த நாயனராக இருத்தல் வேண்டும் எனவும், தறபோதுள்ள வசதியீனங்களால் தலைவர் கூறியமாதிரிக் கொண்டாடமுடியவில்லை எனவுங் கூறினார்கள், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமாள் நாயனரும் முறையே வழியில்பாடி, திருக்கைலையில அரங்கேற்றப்பட்ட திருநொடித்தான் மலைத்தேவாரமும், திருக்கைலாய ஞானவுலாவும், வருணனல திருவஞ்சைக் களததிலும், மாசாத்தனுரால் திருப்பிடவூரிலுள்ள வேதியர்களிடத்தும் அறிவிக்கப்பட்டது. இவ்வாலாறு பெரியபுராணத்தின் இறுதிப்பகுதியில் போற்றப்பட்டுப் புராணம் நிறைவுபெற்றிருக்கின்றது.

"நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசனடியார் பெருமையினை எல்லா
உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டர்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர்மென் கழல் வணங்கவந்த
பிறப்பை [illegible]வும்."

திரு[illegible]ம்பலம்

## ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்

3-ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்மொழியை வளர்ப்பதற்கும் துயநிலையில் வைத்திருப்பதற்கும் ஆற்றிவரும் தொண்டானது நீங்கள் யாபேரும் அறிந்ததொன்றும். அச்சங்கத்தின் வெள்ளிவிழாவானது 1938 ம் ஸு ஏப்பிரல் மீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது. சுவாமிகள் புலவர் கல்லூரியைத் திறந்து வைத்து, அதன தலைவராகிய செந்தமிழ்ப்புலவர் ராவ்சாஹேப் த. வே. உமாமகேசுரம் பிள்ளையவர்களுக்கு "தமிழ்வேள" என்ற பட்டத்தையும் நலகினார்கள். சைவசித்தாந்த சமாஜத்தின் முப்பத்தாறுவது ஆண்டுவிழா திருச்சிராப்பள்ளியில் 1941ஸு டிசம்பர் மீ 25உ முதல் மூனறு நாட்கள் நடந்தன. அதற்கும சுவாமிகள் தலைமை தாங்கி அதனைச் செவ்வனே நடத்தி, பின்பு திருச்சிராப்பள்ளியில் பலநாள் தங்கியிருந்து, பல சொறபொழிவுகள் செய்தபின் 19-1-42 காலை, பழநித் தலத்தை நோக்கிப் புறப்பட்டார்கள், அங்கே பழநி சைவசித்தாந்த சபையின் முதலாவது ஆண்டு நிறைவுவிழாவில் தலைமை வகித்துச் சொற்பொழிவுகள் செய்தபின் 31-1-42-ல் "சிவராஜயோகம்" என்னும் பொருள்பற்றி ஓர் இனிய விரிவுரை நிகழ்த்தினார்கள். இதுவே சுவாமிகளின் கடைசிச் சொறபொழிவு.

பின்பு 1-2-42 ல் காலமே 3மணியளவில் பழநியிலுள்ள அன்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு பல்லக்கிலேறித் தமது மடத்தை நோக்கித் சென்றார்கள். பல்லக்கு எட்டு மைல் தூரம் சென்றவுடன் பல்லக்கை நிறுத்திக் காலைக்கடன்களை முடித்தபின் சிறிது வெந்நீர் வைக்கச் சொன்னார்கள். வெந்நீர் ஒருவாய் அருந்தினபின், தமக்கு உடம்பு அசௌக்கியமாயிருக்கிறதென்று பக்கத்தில் நின்ற ஒருவரிடம் கூறினார்கள். சில நிமிஷங்கள் சென்றபின் இவருடைய ஆன்மாவானது கலியுக வரதராகிய பழநியாண்டவனின் திருவடியை அடைந்துவிட்டது.

இவருடைய திருமேனியானது திருப்பாதிரிப்புலியூர் திருமடத்தில் 1-2-42 இரவு 11 மணியளவில் கொலுவிருத்தப்பட்டது. அன்பர்கள் ஆயிரக் கணக்கில் வந்து தரிசனம் செய்தார்கள். அடுத்த நாள், மாலை 4 மணியளவில் சமாதிக் கிரியைகள் முற்றுப் பெற்றன. திருஞானசம்பந்தர் முத்தியடைந்த புண்ணிய நன்னாளாகிய வைகாசி மூலத்திற் பிறந்து பழநியாண்டவன் திருநாளாகிய தைப்பூசத்தில் சிவநிலையெய்துதல், நிரம்பிய தவமும், சிவபுண்ணியமும் செய்தவர்கேயன்றி மற்றவர்களுக்குக் கைகூடாது. சுவாமிகள் இவ்வுலகில், சொற்பொழிவு செய்ததுடனமையாது, தற்போது ஸ்கந்தலோகஞ் சேர்ந்து, அவ்வுலகிலுள்ளவர்களுக்கு, சைவசமயத்தின் பெருமையையும, சிவசுப்பிரமணியக் கடவுளின் பெருமையையும் போதித்துக் கொண்டேயிருக்கின்றார்கள்.

ஞானியார் சுவாமிகளின் பிரிவைக் குறித்து ஓர் இரங்கற் கூட்டமொன்று கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில், வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் அரசாங்கசபை அங்கத்தவர் திரு. சு. நடேசபிள்ளை B.A., B.L. 21-2-42 இல் நடந்தது. அவர்கள் அப்பொழுது கூறியதாவது:ஞானியார் சுவாமிகள், வடவேங்கடம் முதல் தென்குமரி வரையிலுள்ள சிவஸ்தலங்களையும், சுப்பிரமணிய ஸ்தலங்களையும், தரிசித்தவர்கள் எனவும், ஈழ நாட்டின்கணுள்ள ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் பொருட்டுச் சுவாமிகள் இலங்கைக்கு வருவதாகத் தயக்குக் கூறியதாகவும், எமது தவக் குறைவினால் அவர் அப்படிவர முடியவில்லை'யென்றுங் கூறினார்கள்.

சுவாமிகள் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி முதலிய மொழிகளிலும், இசை, சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளிலும் தேர்ச்சியுள்ளவர்கள். பிறகூறியவைகள் தமது சமயத் தொண்டினைத் தடைசெய்யுமென்று கருதி அவைகளை ஒழித்துச் சமயத் துறையிலேயே உழைத்தார்கள். ஆதீனகர்த்தர்கள் உலக அறிவில் [illegible] சகஜம். ஆனால், [illegible] உலகியல் ஞானம மிகவும் படைத்தவர்கள். நாட்டில் ஏற்பட்டுவரும், அரசியல், பொருளியல், சமய இயல் இயக்கங்கள், எல்லாவற்றையும் நன்கு அறிவார்கள். அரசியற்றுறையில் ஈடுபட்ட பல பெரியார்கள் இவர்களிடம் யோசனை கேட்பதுண்டு.

இங்கே, தற்போது சிலநாட்களுக்குமுன் விஜயமளித்துச் சொன்மாரி பொழிந்த திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A., L.T. அவர்கள் ஞானியார் சுவாமிகளின் மாணவர்களிலொருவராவர். ஞானியார் சுவாமிகள் கந்தசஷ்டி நாட்களில் 'திருமுருகாற்றுப்படை' யென்னும் அருமருந்தன்ன பாராயணநூலை நாளொன்றிற்கு 36 (முப்பத்தாறு) முறை ஓதுவார்களென்று கூறினார்கள். தமிழ்நாட்டில் சுவாமிகளைப் போல நாவன்மை வாய்ந்தவர்கள் வேறொருவர் உண்டோ என்பது ஐயம். பல மணிக்கணக்காகப் பல நாட்கள் பேசக் கூடிய வன்மை யார்க்கு உளது? தென்னிந்தியாவில் தறபோது கிறிஸ்தவ மதம் பரவாதற்குக் காரணம இவரே யென வேற்றுநாட்டினராகிய சில டென்மார்க் (Denmark) தேயத்துப் பாதிரிமார்கள அத் தேசத்திலிருந்து வெளிவரும் தாள்களில் வெளியிட்டிருக்கின்றனர்.

ஞானியாரடிகள் திருச்சிராப் பள்ளியில் 6-1-42 இல் 'நமக்கு வேண்டுவன' என்னும் பொருள் பற்றி இயற்றிய நல்லுரையின் ஓர் சிலவற்றை ஈண்டுத் தருகின்றோம்.

1 தாயிடம் அன்பு:- 'தாயிடம் யாருக்கு அன்பில்லையோ அவர்கள் இனி, அதிகமான தாயைப் பெறுவார்கள்:- பல பிறவிகள் எடுப்பார்கள். தாயிடம் அன்பிருக்குமானல் பிறப்புக் குறையும். நமது வீட்டில் பார்க்கக் கூடிய முதல் தெய்வம் தாய் தான். முருகனை 'வள்ளிதேவசேனுசமேத கந்தனை நான் நமஸ்கரிக்கிறேன்' என்று அஷ்டோத்தர சதகத்தில் சொல்கிறார்கள். அம்மை போடு கூடிய அப்பன் என்றே சொல்லி அருச்சனை ஆரம்பிப்பது வழக்கம். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' இதனால பின்னறிய வேண்டிய தெய்வமும் உளதென்று தெரிகிறது. தாய் கடவுள் தான். தாயிடத்தில் அன்பு வேண்டும். இதுவே எல்லாவற்றிற்கும் ஆதாரமானது.

தாயிடம் அன்பு, உடன் பிறந்தாரிடத்து அன்பு, பெரியவர்களிடம் அன்பு பெரிதும் வேண்டற்பாலன. பெரியவர்கள்—வயதால பெரியவர்கள், அறிவால பெரியவர்கள், பெரியவர்களிடம் அன்பு அவசியம்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

அண்ணியும்தானே யோசித்து இனிமேல் எதனையும் செய்யவேண்டியது" என்று சிந்தனையுடன் பதில் சொன்னாள் சுந்தரேசுவரி. தாய் "நீ சொல்வதும் நியாயந்தான், மகளே" என்று சொல்லிவிட்டு மீண்டு தன் கணவன் இருக்குமிடத்திற்குப்போய், தங்கள் மகள் சொன்னவற்றை அவருக்குச் சொன்னாள். சிதம்பரப்பிள்ளை முன்னரைக்காட்டிலும் அதிகமாக யோசிப்பாராயினார், அப்படி அவர் யோசித்துக்கொண்டிருக்கும்போது முருகுப்பிள்ளையுடையாரும் அங்குவந்து சேர்ந்தார்.

### "அது சரிதான்"

அங்குவந்த முருகுப்பிள்ளையுடையார் சிதம்பரப்பிள்ளையைப்பார்த்து "ஏன் அதிகம் யோசிக்கிறீர்கள்" எனலும் "வேறொன்றுமல்ல எங்கள் மகள் மகனின் கல்யாண விஷயமாகத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறோம்; இந்தச் சமயத்தில் வழுக்கி வீழ்பவனுக்கு ஒரு ஊன்றுகோல் அகப்பட்டாற்போல நீங்களும் வந்தீர்கள்" என்று சிறிது மகிழ்ச்சியோடு சொன்னார் சிதம்பரப்பிள்ளை; "இதற்கு ஏன் அதிக யோசனை; உங்களுக்குள்ளே தானே மாப்பிள்ளை பெண்பிள்ளையெல்லாம் உண்டு; வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்தேடப் போவாரும் உண்டோ" என்று புன்னகையோடு சொன்னார் உடையார்; "நீங்கள் சொல்வது ஒன்றும் புலப்படவில்லை, அண்ணே" என்று சிதம்பரப்பிள்ளை சொல்லுதலும், உடையார் "உங்கள் மகளைப்பற்றித்தானே யோசிக்கிறீர்கள்; நீங்கள் சம்பந்தங்கொண்ட வழியில் உங்கள் மருமகளுடைய தமையன் குமாரசுவாமியென்ற வாலிபன் இருக்கிறானே; அவன் அருமையான பிள்ளையல்லவா; அந்தப் பிள்ளையிருக்க நீங்கள் வேறு சம்பந்தம் பேசிப் போகவேண்டியதில்லையே; போனவழியிற் போவது தானே நல்லது" என்றார்; அதனைக் கேட்ட சிதம்பரப்பிள்ளை "அந்தக் குடும்பத்திலே பெண் எடுப்பேனேயொழிய மாப்பிள்ளையெடுக்கமாட்டேனென்று முந்தியே சொல்லிவிட்டேன்; ஆனதால் என் மகளுக்கு அந்தப் பிள்ளையைச் செய்யும் நோக்கம் எனக்கில்லை" என்று பதில் சொன்னார் சிதம்பரப்பிள்ளை; "அப்பொழுது இருந்த நிலைமைக்கு நீர் சொல்லியிருக்கக்கூடும்; ஆனால் இப்பொழுது அந்தக் குடும்பத்தின் மகத்துவம் உங்களுக்கு விளங்குந்தானே; உங்களுடைய மருமகளின் மேலான குணம் ஒழுக்கமிவைகளைப்பற்றி அடலட்டத்திலுள்ளார் நன்மையாகப்பேச நான் கேட்டிருக்கிறேன்; இனிமேல் நீங்களும் அந்தக் குடும்பத்தினரும் அந்நியோந்நியமாக ஊடாடவேண்டும்; அல்லாமலும் நீங்கள் உங்கள் மகளுக்கு அந்தக் குடும்பத்தை விட்டு வேறு குடும்பத்திற் கல்யாணம் பேசிப்போவது உங்கள் மகனுக்கும் விருப்பமாக விராதென நினைக்கிறேன்; மகனுக்கு மாத்திரமல்ல உங்கள் மகளுக்குத்தானும் விருப்பமாக இருக்கமாட்டாது" என்று சொல்லுதலும், அயலே நின்ற சிவகாமித்தாய் "நீங்கள் சொல்வது நிசந்தான், பெரியப்பா, தகப்பனார் சொற்படி எங்கள்மகளை இந்தக் கருமமாக நோக்கங்கேட்டபோது, தன் தமையனுடைய சம்மதத்தையும் மேவி எதுவுஞ்செய்ய வேணுமென்ற எண்ணமுடையவளாகக் காணப்படுகிறாள்" என்று சொன்னாள். "உங்கள் பிள்ளையை அந்தப்பிள்ளைக்குக் கல்யாணஞ் செய்துவைப்பதே நலம் என்பது எனது தீர்க்கமான எண்ணம்" என்றார் உடையார். இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளை "அப்படியானால் எங்கள் மகனுடைய நோக்கத்தையும் நீர் அறிந்து சொல்லும்" என்று தமது மனைவிக்குச் சொல்ல, அவள் "மகளின் விருப்பத்தைக் கேட்டறியவேண்டியவள் நான்; மகனுடைய நோக்கத்தை உசாவியறிய வேண்டியது தகப்பனாருடைய கடமையல்லவா? ஏன் பெரியப்பா, நான் சொல்வது ஞாயந்தானே" என்று உடையாரை நோக்கிச் சொல்ல, உடையாரும் "அது சரிதான்" என்றார். "தம்பி, உங்கே நிற்கிறானா? நின்றால் இங்கே வரும்படி சொல்லும்" என்று சிதம்பரப்பிள்ளை மனைவிக்குச் சொல்ல, அவள் போய் மகனுக்குத் தெரிவிக்க, உடனே மகன் தலைவாசற்பக்கத்தில் வந்து நின்றான்; தாய் மீண்டு தலைவாசலுக்கு வருதலின்றித் தன் வீட்டுக்கருமம் பார்க்கப் போனாள்; வந்த மகனைத் தந்தை நோக்கி "தம்பீ, உன் தங்கையின் கருமத்தில் இன்னமும் அலட்சியமாக விருப்பது புத்தியல்ல; எங்களுக்கும் வயசு போகிறது; எந்தக் கருமத்தையும் பார்க்கவேண்டிய காலத்திலேயே சோர்வின்றிப் பார்த்து வைக்கவேண்டும்; பேர்ந்தென்பதும் பின்னை யென்பதுவும் ஆகா; தங்கைச்சிக்கு எங்கேனும் மணம் பேசுவிக்கலாமென்று யோசிக்கிறேன்; உன்னுடைய எண்ணமென்ன" என்று வினவினார். "உங்களுக்கும் அம்மாவுக்கும் தங்கைச்சிக்கும் எது சம்மதமோ அது எங்களுக்குஞ் சம்மதந்தானே" என்று பன்மையிற் சொன்னான் சுந்தரேசுவரன்; "எங்கள் மருமகளுடைய தமையனைச் செய்துவைப்பது உனக்குப் பிரியமோ" என்று மீட்டுங் கேட்டார் தகப்பனார்; "பிரியந்தான், ஐயா, ஆனாலும் தங்கைச்சிக்கும் உங்களுக்கும் அம்மாவிற்கும் அது சம்மதமோ என்பதை யோசிக்க வேணுமே" என்று விநயமாக விடை சொன்னான் மகன். உங்கள் அம்மாவிற்குச் சம்மதமாயிருக்குமென்று நினைக்கிறேன்; உன் தங்கையின் நோக்கத்தை அறியேன்; ஆனால், உனது மைத்துனன் விஷயத்திலே எனக்குச் சந்தேகமுண்டு; எங்கள் முருகேசபிள்ளை வீட்டுப் பெண்ணைக் கல்யாணஞ் செய்வதற்கு அந்தப் பிள்ளைக்குந் தாய்க்கும் விருப்பமிருக்கிறதாக அறிகிறேன்" என்றார் சிதம்பரப்பிள்ளை. "ஏன், ஐயா, அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான் அப்படி நினைக்கவில்லை', என்று மகன் சொல்வதற்கிடையில் தகப்பனார் "இல்லை, தம்பீ, அந்தப்பிள்ளை அவர்கள் வீட்டிலே தான் அதிகங் கொண்டாடுவதென்று ஆரோ எனக்கு எப்போதோ சொல்லக் கேட்ட ஞாபகமிருக்கிறது; அதனாற்றான் சொல்லுகிறேன்" என்றார். "அது வீண்கதை, ஐயா, அவர் அங்கே அதிகமாகப் போவது வருவது நிசந்தான்; ஆனால், அவர் இப்படியான நோக்கத்துடன் அந்த வீட்டாருடன் கொண்டாடுவதில்லை; முருகேசபிள்ளை வீட்டுப் பெண்ணைத் தன் சகோதரம் போலவும் அப்பெண்ணின் தாய் தகப்பனைத் தம் பெற்றோர்போலவும் மதித்து நடக்கிறார்; அவர்களும் அந்த முறையிலேயே இவர்களோடு ஊடாடி வருகிறார்கள்; எங்கள் கல்யாணத்தைப் பெண்பகுதிக்காக நின்று முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்தியவர்கள் அவர்களே; அந்த நன்றியை என்றும் மறவாதவராய் இவர்கள் அவர்களோடு நடந்து கொள்ளுகிறார்கள்; மேலும், என் மைத்துன ரென்றதை யிட்டுச் சொல்லுகிறேனென்ன எண்ணாதீர்கள், ஐயா, அந்தக் குமாரசாமியைப்போல் உத்தமமான ஒருவரை நாங்கள் எக்காலத்திலும் தேடமுடியாது. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ, இக்காலத்து வாலிபரெல்லாரும் குமாரசுவாமியை ஒப்பாரே; அவருடன் நான் சிறுபாயந்தொட்டு ஊடாடி வருகிறேன்; அவர் இன்னது செய்வார் இன்னதைச் செய்யாரென்பதை நான் நல்லாய் அறிவேன்; அப்படியான நோக்கம் ஏதுமிருந்தாலும் உங்கள் மருமகளுக்குத் தெரியாமலிராது; அப்படியொன்றும் இல்லை, ஐயா, அது தெருக்கதை" என்று பரிந்து சொன்னான் சுந்தரேசுவரன். பக்கத்தே இருந்த உடையாரும் "சே! சே! அவையெல்லாம் வெறுங் கதை; அந்தப் பிள்ளையைப் பற்றி உங்களெல்லாரைக் காட்டிலும் நான் அதிகம் நன்றாய் அறிவேன்" என்றார். "விஷயம் இப்படியா, உண்மையில் இது எனக்குத் தெரியாது; இதற்காகத்தான் ஊர்க்கதை எல்லாவற்றிற்கும் செவிசாய்க்கக் கூடாதென்று சொல்லுவார்கள்; நல்லது; அண்ணே நீங்களே இந்த மங்கல கருமத்திலும் தலையிடவேண்டும்; நீங்கள் கையிட்ட கருமம் எதுவும் கைகூடும்; இது உபசாரமல்ல, உண்மையாகத்தான் சொல்லுகிறேன்" என்று உடையாரைப் பார்த்துச் சொல்லிவிட்டு, சிதம்பரப்பிள்ளை தம் மனைவியைக் கூப்பிட அவளும் அங்கே வந்தாள்" "உன்னுடைய எண்ணத்தின்படிதான் நான் இப்போது அண்ணனைச் சின்னம்மாள் வீட்டிற்குச் சம்பந்தம் பேசும்படி அனுப்பப் போகிறேன்; இன்றைக்கு நல்ல நாள்" என்றார். "என் எண்ணப்படியென்றுஏன் சொல்லுகிறீர்கள்; உங்கள் எண்ணப்படியென்றே சொல்லலாமே; அப்படியே அனுப்பி வையுங்கள்" என்று சந்தோஷத்தோடு சொன்னாள் சிவகாமித்தாய். உடையாரும் அவர்கள் விருப்பத்தின்படி மணம் பேசுதற்குச் சின்னம்மாள் வீட்டிற்குப் புறப்பட்டுப் போனார்.

### மணம் பேசுதல்

சின்னம்மாள் வீட்டிற்கு உடையார் போனபோது குமாரசுவாமி அங்கேயில்லை; உடையார் வரவைக் கண்ட சின்னம்மாள் அவரைப் பெரிதும் உபசரித்து இருக்கச்செய்து "அண்ணே! நீங்கள் இந்தப் பக்கம் வந்து வெகுநாள்" என்று சொல்வதற்கிடையில் "வரக்கூடாதென்றல்ல, பிள்ளை, எனக்கும் பல வேலைகள் உண்டு; அங்குப் போக நேரமேயில்லை; அல்லாமலும் ஏதும் கருமமிருந்தாற்றானே போவதும் வருவதும்" என்றார். "அண்ணே, ஏதுங்காரணமில்லாமல் வரமாட்டீர்கள்; வந்தநோக்கம் என்னவென்பதை நான் அறியவொண்ணாதா?" என்று சின்னம்மாள் கேட்க "வேறொன்றுமில்லை, பிள்ளை, நீங்கள் புகுந்த இடந்தானே; இனி அதிகம் யோசிக்க வேண்டியதில்லை; உங்கள் மூத்த மகனுக்குச் சிதம்பரப்பிள்ளை தம் மகளைக் கல்யாணஞ் செய்துவைக்கலாமென்று யோசிக்கிறார்; அவர் அப்படி யோசிப்பது நியாயமானது; அல்லாமலும் அவர் வீட்டிற் போயிருக்கும் உங்கள் பெண்பிள்ளைக்கும் அது பெரும் உதவியாகவிருக்கும்; எங்களெல்லாருக்கும் அது சந்தோஷம்; அப்படிச் செய்ய உமக்கும் பிரியந்தானே" என்று கேட்டார் உடையார். இப்படிச் சொல்லக்கேட்ட சின்னம்மாள் எல்லையற்ற சந்தோஷமடைந்தாளாய் "அதற்கென்ன தடை அண்ணே, எங்களெல்லாருக்கும் பிதாப்போல இருக்கும் நீங்களே இத்தநல்ல கருமத்தில் தலையிட்டு இதனை நிறைவேற்றி வைக்க வேணும்; இந்த விஷயத்தை எங்கள் முருகேசபிள்ளை வீட்டுக்காரருக்குச் சொன்னால் அவர்களும் சந்தோஷப்படுவார்கள்; ஆனாலும் அண்ணே, எங்கள் பிள்ளையையும் ஒருசொல்லுக் கேட்கத்தானே வேண்டும்; அவனுடைய விருப்பத்தை அறியாமல் நான் எப்படி முற்றுச் சொல்லலாம்; அவன் இன்னுஞ் சற்றுவேளையில் வந்துவிடுவான்" என்று சொன்னாள்; இப்படிச்சொல்லி முடிவதற்கிடையிலே, வெளியே சென்றிருந்த குமாரசுவாமி மீண்டு அங்கேவர, கண்ட தாய் "தம்பியும் இங்கே வந்துவிட்டான்" என்று உடையாருக்குச் சொல்ல, "தம்பி, குமாரசுவாமி, உம்மைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என உடையார் சொல்ல, அவன் அவர் பக்கலில் வந்து விநயமாக நின்றான், உடையார் சிறிதுநேரம் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் விஷயத்தைக் குமாரசுவாமிக்குச் சொன்னார். குமாரசுவாமி "ஐயா, உங்கள் வாக்கைத் தலைமேற் கொள்ளுகிறேன்; உங்கள் எண்ணத்திற்கு நான் எவ்வகையிலும் மாறல்லேன்; ஆனால் என் இளைய சகோதரியின் கருமம் நிறைவேறிய பின்புதான் நான் வேறு கருமங்களைப்பற்றி யோசிக்கலாம்; எல்லாமறிந்த உங்களுக்கு நான் ஏதுஞ் சொல்வது முறையல்ல" என்று சொல்லி உடையாரை நமஸ்கரிக்க அவரும் பிரதிநமஸ்காரஞ் செய்து "தம்பீ, சிறுபிள்ளையானாலும் நீங்கள் சொல்வது முழுவதுஞ் சரி; ஏதோ ஆங்காலந்தான் எதுவும் ஆகும்; என்று சொல்லிப் பின்னரும் சிறிதுநேரம் அங்கேயிருந்து வார்த்தையாடிவிட்டு அவர்களிடம் அனுமதிபெற்றுக்கொண்டு மீண்டார். (வரும்)

## ஜெர்மனியில் அமைதியின்மை!

### மகத்தான அரசியல் மாற்றங்கள் அங்குஏற்படலாம்

### சர்ச்சில் -ரூஸ்வெல்ட்- ஸ்டாலின் சந்திப்பு?

நியூயோர்க் ஆக 8— இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் பிரதானமான இராணுவ அரசியற் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன என்று கிடைத்த ஜெர்மன் ஆகாயவசனிச் செய்தியை வைத்துக் கொண்டு அமெரிக்கப் பத்திரிகைகள் பலவாறு ஹேஷ்யங் கூற ஆரம்பித்திருக்கின்றன. ஜெர்மனிக்குள் மிகப் பெரிய சம்பவங்கள் நடைபெறுவதாகப் பலரும் கருதுகின்றனர். யுத்த விஷயத்தில் அனுபவம் முதிர்ந்த ஒருவர் ஹிட்லருக்குப் பதிலாக நியமிக்கப்படலாமென்று இராணுவ வட்டாரங்களிற் சொல்லப்படுகிறது.

வாஷிங்டனிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு அறிவிக்கிறார்:

ஜெர்மனிக்கு அமைதியின்மை அதிகரித்து வருவதாகக் கிடைத்திருக்கும் செய்திகள் இங்குள்ள இராணுவ ராஜதந்திர நிபுணர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றது. இங்கு வெளியிடப்படும் ஹேஷ்யங்களெல்லாம் மனம் போனபடி நினைக்கப்படுபவையென்று நம்பத்தகுந்த சில வட்டாரங்கள் கருதுகின்றனவெனினும், அடுத்த சில மாதங்களுக்குள் ஹிட்லர் பதவியிலிருந்து வீழ்த்தப்படக்கூடிய விதமாக ஜெர்மனியின் உள்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்க விருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலங்கையின் பல்வேறு சமயங்களுக்கும் சாதிகளுக்கு மிடையே இப்போதிருப்பதைக் காட்டிலும் சிறந்த நல்லெண்ணத்தை வளர்ப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. எங்கள் இளைஞர்களைச் சிறந்த தேசமக்களாக்கக்கூடிய கல்வியே இன்று அவசியத் தேவைப்படுகின்றது. தேர்தல்களில் தகாத முறைகள் தலைவிரித்தாடுகின்றன. நேர்மையற்ற முறைகள் நடைபெறுவதற்குக் காரணம் ஜனங்கள் சமய, சாதித்துவேஷக் கூக்குரலிடுவோரின் கருத்துக்களால் தாம் ஏமாற்றப்படாமல் தகுந்தபடி தம் வாக்கை உபயோகப்படுத்த வேண்டும் என்பதன் அருமையை உணரக்கூடிய கல்வியறிவு பெறவில்லை.

இந்துக்கல்லூரி அதிகாரசபையார் ஓர் இந்துப்பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கின்றார்கள் என்பதை அறிய நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்து இல்லம் சம்பிரதாயம் முதலியவை காப்பாற்றப்படுதற்காக, இந்துப் பெண்கள் இந்து முறையிற் கல்வி பெறவேண்டும். எழுதப்படிக்கத்தெரிதல் மாத்திரம் கல்வியாகாது. எங்கள் பெண்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் பலர் கல்வியறிவுடையவர்களாயிருக்கின்றனர். ஆயின், எழுதப்படிக்கத் தெரிதல் அவர்களை இன்னும் அதிக கல்வியறிவுடையவர்களாக்கும். இந்து கலாசாலைகளிற் போதிக்கப்படும் லௌகீகக் கல்வி மிக உயர்ந்ததொன்றாக இருந்தாலன்றிப்போட்டிடால் அவர்கள் கஷ்டமுற நேரிடும்."

திரு. A. குமாரசுவாமியவர்கள் இதற்குப் பதிலளிக்குங்கால், திரு. சுந்தரலிங்கமவர்களுக்குத் தமது நன்றியைத்தெரிவித்து, அவர் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்று தமது அபிப்பிராயத்தையுந் தெரிவித்தார்.

அதன்பின், விருந்துக்கு வந்திருந்தோரின் சார்பாகப் பேசிய திரு. V. T. S. சிவகுருநாதனவர்கள் பேசியதாவது:-

திரு. சுந்தரலிங்கமவர்கள் தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்பது என் விருப்பம். அவர் ஓர் இந்து என்பதற்காக நான் இவ்வாறு கூறவில்லை. அவர் இலங்கையிலுள்ள மிகத் திறமை வாய்ந்தவர்களில் ஒருவர். இந்நாட்டின் முன்னேற்றத்தை உருவமையப்பண்ணுவதில் அவரது பணியை நாமெப்போதோ உபயோகித்திருக்கவேண்டும். திரு. சுந்தரலிங்கமவர்கள் அரசாங்கசபையில இருக்கவேண்டுமென்பதை ஆசிரியர்கள் விரும்புகிறார்கள். ஏனெனில், கல்விப்பகுதியின் விசேஷ நிர்வாக சபை கல்வி முறையில் பெரிய மாற்றங்களைச் செய்ய ஆலோசித்து வருகிறது. திரு. சுந்தரலிங்கமவர்கள் இந்நாட்டில் ஒரு பிழையான கல்வி முறை ஏற்படுத்தப்படாமல் விருப்பதைப் பார்த்துக்கொள்ளுவார்.

திரு. V. K. நாதன் (வடபெரும்பாக வித்தியாதரிசி) பதிலிறுத்தார்.

திரு. S. V. பாலசிங்கம் சகோதரப் பள்ளிக் கூடங்களின் சார்பாகப் பேசினார். அதுகாலை அவர் அப்பள்ளிக்கூடங்களுக்கிடையே ஒற்றுமையிருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தினார்.

ஐக்கிய நாணய சங்கங்களின் தற்காலிக றிஜிஸ்ட்ரார் மிஸ்றர். R. C. S. குக் பதிலிறுத்தார்.

## ஜெர்மனியில் அமைதியின்மை!

5-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டு நிலைமை இருந்து வருகிறதென்று சிலர் முடிவு கட்டிவிடத் தயாராயிருக்கின்றனர்.

ஹிட்லரைச் சுற்றியிருக்கும் பிரபலஸ்தர்களிற் சிலரை அப்புறப்படுத்துவதைக் கொண்டு பிரதானமான அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவிதமாக இராணுவ நிலைமை இப்போது இருந்துவருவதாக ஜெர்மனியிலுள்ள மத்திய வகுப்பினரும் மேல் வகுப்பினரும் கருதுகின்றார்களென்று நடுநிலைமை நாட்டு வட்டாரங்களிலிருந்தும் இரகசிய வட்டாரங்களிலிருந்தும் கிடைக்குஞ் செய்திகள் கூறுகின்றன.'

### சர்ச்சில்-ரூஸ்வெல்ட்-ஸ்ராலின் சந்திப்பு

பிரதம மந்திரி மிஸ்றர். வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும், மிஸ்றர். ரூஸ்வெல்டுக்கும் எந்த நேரத்திலும் இன்னொரு சந்திப்பு நடைபெறலாமென்ற செய்தியைப் பற்றி நியூயோர்க் 'ஹெறாடு டிரிபியூன்' பத்திரிகை விவாதிக்கையில் அந்தச் சந்திப்பின்போது ஸ்டாலினும் சமூகமாயிருக்கலாமெனபது நம்பத் தகுந்த ஒரு உத்தேசமென்று அப்பத்திரிகை கூறுகிறது. அது மேலும் எழுதுவதாவது:

தற்போதிருந்துவரும் இராணுவ நிலைமை ஜெர்மனியில் ஒரு அரசியல் மாற்றம் ஏற்படலாமென்பதை வற்புறுத்தும் சகுனமாக இருக்கிறது. சமீபத்திலோ, அல்லது பல நாட்களுக்குப் பிறகோ ஜெர்மன் இராணுவம் அல்லது ஆட்சி தகர்ந்து போகும். அப்போது நேச தேசங்களுக்கிடையில் அரசியற் றுறையிலாவது ஒற்றுமை இருக்க வேண்டியது அவசியம்.

மிஸ்றர். சர்ச்சிலுக்கும், மிஸ்றர். ரூஸ்வெல்டுக்கும் இடையில் மாத்திரம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுவது மட்டும் போதுமானதல்ல. பிரான்சையும் ஏனைய சிறிய தேசங்களையும் உதாசீனஞ் செய்துவிட முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்டாலின் பிரதானமாகக் கவனிக்கப்படல் வேண்டும்.

## ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும். இதை நம்முடைய புலவராகிய திருவள்ளுவர் கூறியுள்ளார். 'அரியவற்றுள் எல்லாம் அரிது' ஒரே ஒன்று அருமையானது. அது தான் 'பெரியாரைப் பேணித் தமராகக் கொளல்' பெரியாரைப் பேணி என்பதில் பெரியாரின் கருத்துப்படி ஒழுகி' நம்மவர்கள் என்று நம்மை அவர்கள் எண்ணும்படி நாம் நடந்து கொள்ள வேண்டும். ஒழுக்கத்தில் நம்மவர்கள் நம்மைத் தப்புச் சொல்லாத வகையில் நடந்து கொள்ள வேண்டும். இதையே இராமன் என்ற சொல் குறிக்கிறது. 'இராமன்' என்றால் தன்னுடைய குணத்தாலும், செயலாலும் பெரியோரை இரமிக்கச் செய்பவன்'

ஞானியார் சுவாமிகளின் பெருமை கடலைப் போலப் பெரியது. யான் எனது சிற்றறிவெனும் சிறுநாழியால் முகந்து சிலவற்றைக் கூறினேன்.

"ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளிவாழ்க
வாழ்க [illegible]
— [illegible]

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### வெள்ளி ஆகஸ்ட் 13

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலிஇசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 தஞ்சாவூர் கமலாம்பாள் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தஞ்சாவூர் கமலாம்பாள் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 தஞ்சாவூர் கமலாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கல்லிடைக்குறிச்சி ஏ. பாலசுப்ரமண்ய பாகவதர் பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 சிதம்பரம் ஸி. வி. கோவிந்தசாமிப்பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7–45 யாங்ஸியில் புசல் நாடகம் 8 கல்லிடைக்குறிச்சி ஏ. பாலசுப்ரமண்ய பாகவதர் பாட்டு 8-30 ஸி. வி. கோவிந்தசாமிப்பிள்ளை நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 டாக்கி இசை † 10-30 முடிவு.

### சனி ஆகஸ்ட் 14

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஈரோடு என். ஆர். விஸ்வநாதையர் வயலின் 9 முடிவு.

1 டி. என் கங்காபாய் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 படப்பாட்டுகள் 2 தமிழில் செய்திகள் 2-05 ஈரோடு என். ஆர். விஸ்வநாதய்யர் வயலின் 2-30 முடிவு.

மாலை 5 டி. என். கங்காபாய் பாட்டு 5.40 ஸ்கந்த புராணம் 6 சினிமாப்பாட்டுகள் † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இஸ்லாமிய பண்பாடு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 செம்பை வைத்யநாத பாகவதர் பாட்டு 9-15 உமா 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கிளாரினேட் தில்ருபா 10 இசைவேளை 10-30 முடிவு.

### ஞாயிறு ஆகஸ்ட் 15

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வாத்ய இசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஏ. ஜி. ஏ. சிவக்கண்ணன் தேசிகர் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. எஸ். கிருஷ்ண ஐயங்கார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம் 2-30 முடிவு.

மாலை 5 டி. எஸ். கிருஷ்ண ஐயங்கார் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஏ. ஜி. ஏ. சிவக்கண்ணன் தேசிகர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தென்னாட்டுக் கோயிற் சிற்பம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே. பி. சிவானந்தம்பிள்ளை வீணை 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் வியோலா சாக்ஸோபோன் 10 முசிறி சுப்பிரமணியஐயர் † 10-30 முடிவு.


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருனு அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5.8—31.12.43)



## சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை, பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.

(Q. 30. 11-5.43—10-8.43)



## குறைந்த விலையில் துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்றோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 12, August, 1943.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org